A.ANDREWS DAVID
President
96000 00467
95001 49962
Regd.No.:359/2016
PRINT MEDIA ELECTRONIC MEDIA JOURNALIST ASSOCIATION
H.O.#119, Singanna Chetty Street, Chintadripet, Chennai-600 002
e-mail: pmemjournalist_association@yahoo.com

RNI No. TNTAM/2016/72390
Email: dhinathodar2015@gmail.com

# தின தொடர்

தினசரி காலை நாளிதழ்

சென்னை | மலர் 9 | இதழ்78 | 23-05-2023 | செவ்வாய்க்கிழமை | 4 பக்கங்கள் | விலை ரூ. 2/-

# நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி கருணாநிதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை:** மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கட்சி சார்பில் ஒரு வருடம் கொண்டாட முடிவெடுத்து உள்ள நிலையில் அரசு சார்பிலும் சிறப்பாக கொண்டாடுவது குறித்து அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இன்று காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அனைத்து அமைச்சர்கள், அரசுத்துறை செயலாளர்கள், காவல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கருணாநிதியின் நூற்றாண்டு விழா ஜூன் 3ந் தேதி கட்சி சார்பில் சிறப்பாக கொண்டாடப்படும்.

அதே நேரத்தில் அரசு சார்பிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது பல்வேறு முக்கிய அறிவுரைகளை வழங்கினார். கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும் போது கூறியதாவது: கலைஞர் நூற்றாண்டு விழா என்பது கலைஞர் ஆற்றிய பணிகளை நினைவு கூர்வதாக இருக்க வேண்டும். நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர். எனவே அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் விழாவாக இந்த விழாவை நடத்த வேண்டும். 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்ந்தவர் தலைவர் கலைஞர். 13 முறை சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்.

தமிழக மேல்சபை உறுப்பினராகவும் அமர்ந்து அரிய விவாதங்களை எடுத்து வைத்தவர். அவர் தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாது இந்திய அரசியல் திசையை தீர்மானிப்பவராகவும் இருந்தவர். முதல் முறையாக அவர் ஆட்சிக்கு வந்த போது, கூறிய வார்த்தை நான் முதலமைச்சராக இருந்தாலும் அங்கிருந்தபடியே குடிசைகளை பற்றி சிந்திப்பேன் என்றார். தன்னுடைய ஆட்சிக்கு 3 இலக்கணம் இருப்பதாக கலைஞர் கூறுவார். சமுதாய சீர்திருத்த தொண்டு,



வளர்ச்சிப் பணிகள், சமதர்ம நோக்கு இவை மூன்றும்தான் ஆட்சியின் இலக்கணமாக இருந்தது. அந்த இலக்கணத்தின் அடிப்படையில் தான் ஆட்சி நடத்தினார்.

அதனால் அனைத்து துறைகளும் ஒரு சேர வளர்ந்தது. அன்னை தமிழ் மொழிக்கு செம்மொழி தகுதி, ஒன்றிய அரசின் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு உரிமை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற சட்டம், மகளிருக்கு சொத்தில் சமஉரிமை சட்டம், சமூகநீதி உரிமைகள், உழவர்களுக்கு இலவச மின்சாரம், கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட ரூ.7 ஆயிரம் கோடி கடன் ரத்து, சென்னை தரமணியில் டைடல் பார்க் என பல்வேறு சாதனை திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். மொத்தத்தில் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது.

கலைஞரின் நூற்றாண்டு விழா ஜூன் 3ந்தேதி முதல் நடைபெற உள்ளதால் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது. நூற்றாண்டு விழா, தலைமைக்குழு, விழாக்குழு, மலர்க்குழு, கண்காட்சி குழு போன்ற குழுக்கள் அமைச்சர்கள் கொடுத்த ஆலோசனைகள் அனைத்தையும் வரிசைப்படுத்தி தொகுத்து பின்னர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். கலைஞர் ஆற்றிய நலத்திட்டங்களை பட்டியலிட்டு நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூர்வதாக இருக்க வேண்டும். எனவே அமைச்சர்கள் குழுக்களுடன் அடிக்கடி கலந்து பேசி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். சென்னை கிண்டி கிங்ஸ் மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை ஜூன் 5ந் தேதி ஜனாதிபதி திரவுபதி முர்மு திறந்து வைத்து நூற்றாண்டு விழாவை தொடங்கி வைக்க உள்ளதால் அவரது வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துவது தொடர்பாகவும் காவல்துறை அதிகாரிகளுக்கு அவர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

## 2,000 ரூபாய் நோட்டுகளை இன்று முதல் வங்கிகளில் மாற்றிக்கொள்ளலாம் ரிசர்வ் வங்கி கவர்னர்

**மும்பை:** செப்டம்பர் மாதம் 30ந் தேதிக்கு பிறகு 2,000 ரூபாய் நோட்டு செல்லாது என்ற அதிரடி அறிவிப்பை பாரத ரிசர்வ் வங்கி கடந்த 2 தினங்களுக்கு முன்பு வெளியிட்டது. அதன்படி 2,000 ரூபாய் நோட்டு புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறப்படுவதாகவும் 2,000 ரூபாய் நோட்டுகள் வைத்திருப்போர் அவற்றை வருகிற 23ந் தேதி (நாளை) முதல் வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2,000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்வதற்கு வரும் செப்டம்பர் மாதம் 30ந் தேதி கடைசி நாள் ஆகும். மேலும் ஒரு நபர் ஒரே நேரத்தில் 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 2,000 ரூபாய் நோட்டுகளை மட்டுமே வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2000 நோட்டுகளை மாற்றுவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டு வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி இன்று முதல் 2000 ரூபாய் நோட்டுக்களை வங்கிகளில் மாற்றி கொள்ளலாம். இதற்காக வங்கிகளில் தனி கவுண்டர் வசதியும் ஏற்படுத்தப்பட உள்ளன.

என்றும் ரூ.2000 நோட்டுகள் குறித்த அன்றாட தரவுகளை பராமரிப்பதோடு, கேட்கும் போது விவரங்களை வழங்க வேண்டும் என்று வங்கிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வாடிக்கையாளர்கள் ரூ.2000 நோட்டுகளை வழங்குவதற்கான படிவத்தையும் ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் கூறுகையில், "ரூ.2,000 நோட்டுகளை திரும்ப பெறும் நடவடிக்கை வழக்கமான நடைமுறை தான். ரூ.1000, ரூ.500 நோட்டுகள் வாபஸ் பெறப்பட்டதால் உடனடி தேவைக்காக ரூ.2,000 நோட்டுகள் வழங்கப்பட்டன. உயர்மதிப்புள்ள ரூ.2,000, ரூ.500 நோட்டுகளில் பாதுகாப்பு அம்சங்களில் எந்த குறைபாடும் இல்லை. ரூ.2,000 நோட்டுகள் அச்சிடும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. நோட்டுகள் அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியை முடித்துவிட்டன.

இது ரிசர்வ் வங்கியின் கரன்சி மேலாண்மை நடவடிக்கைகளின் ஒரு பகுதி என்பதை தெளிவு படுத்துகிறேன். 2000 ரூபாய் நோட்டுகளை மாற்ற மக்கள் அவசரப்பட வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார்.


## ரூ.2,000 நோட்டுகளை பஸ்களில் பயணிகள் மாற்றலாம்: போக்குவரத்துறை

செப்டம்பர் மாதம் 30ந் தேதிக்கு பிறகு 2,000 ரூபாய் நோட்டு செல்லாது என்ற அதிரடி அறிவிப்பை பாரத ரிசர்வ் வங்கி வெளியிட்டது. அதன்படி 2,000 ரூபாய் நோட்டு புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறப்படுவதாகவும் 2,000 ரூபாய் நோட்டுகள் வைத்திருப்போர் அவற்றை வருகிற 23ந் தேதி செவ்வாய்க்கிழமை முதல் வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் அரசு பேருந்துகளில் 2 ஆயிரம் நோட்டுகளை வாங்க வேண்டாம் என்று நடத்துனர்களுக்கு போக்குவரத்து கழகம் அறிவுறுத்தி இருந்தநிலையில், அரசு பஸ்களில் பயணிகள் தரும் ரூ 2,000 நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பயணிகள் தவிர வெளிநபர்கள், தனியார் நிறுவனங்கள் ரூ 2,000 நோட்டுகளை மாற்ற அனுமதியில்லை என போக்குவரத்துறை தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 103 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்..!

**சென்னை:** தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் தொழிற்துறை, விவசாயம், நகர்புற மற்றும் ஊரக மேம்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக அதிகரித்து வரும் மின் தேவைக்கு ஏற்றவாறு மக்களுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க செய்யும் உயரிய நோக்குடன், தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்கள் அமைத்தல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களின் திறனை மேம்படுத்தும் விதமாக கூடுதல் மின் மாற்றிகள் அமைத்தல், சரியான மின் அழுத்தத்துடன் கூடிய சீரான மின்சாரம் வழங்குதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல் போன்ற பணிகளை, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். தொழில்நுட்ப உதவியாளராக




24 நபர்களுக்கும், இளநிலை உதவியாளராக (கணக்கு) 2 நபர்களுக்கும், மின் கணக் கீட்டாளராக 14 நபர்களுக்கும், தட்டச்சராக 1 நபருக்கும், களப்பணி உதவியாளராக 56 நபர்களுக்கும், உதவி வரைவாளராக 1 நபருக்கும், காவலாளியாக 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் (பகிர்மானம்) சிவலிங்கராஜன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க.வினர் பேரணி

**சென்னை:** தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் பகுதியில் விஷச் சாராயம் குடித்த 22 பேர் உயிரிழந்த நிலையில் இன்னும் பலா□ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி வரும் நிலையில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றதால் கள்ளச்சாராயம் மரணம் தொடர்பாக கவர்னர் ஆர்.என்.ரவி தமிழக அரசிடம் விளக்கம் கேட்டிருந்தார். இந்த நிலையில் மேலும் ஒரு சம்பவமாக தஞ்சாவூர் டாஸ்மாக் பாரில் மது குடித்த குப்புசாமி, குட்டி விவேக் ஆகிய 2 பேர் நேற்று பரிதாபமாக உயிரிழந்து உள்ளனர்.

இந்த சம்பவம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தி.மு.க. ஆட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கள்ளச்சாராயத்தால் பலர் பலியாகி வருவதை கண்டதும் தி.மு.க. ஆட்சிக்கு எதிராக கவர்னரிடம் மனு கொடுக்க போவதாக ஏற்கனவே அறிவிப்பு வெளியிட்டு இருந்தார். சட்டம்ஒழுங்கு சீர்கேடு, தொடர் மின்வெட்டு, விஷச்சாராய மரணங்கள், அதிகரித்து வரும் போதைப் பொருட்களின் புழக்கம், ரூ.30 ஆயிரம் கோடிக்கு விசாரணை, பழனிவேல் தியாகராஜன் பேசியதாக கூறப்படும் ஆடியோ விவகாரம் உள்ளிட்ட ஆட்சியின் பல்வேறு முறைகேடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கவர்னர் ஆர்.என்.ரவியை சந்தித்து மனு கொடுக்கப் போவதாக அறிவித்து இருந்தார்.

இதற்காக அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கும் அழைப்பு விடுத்து இருந்தார். அதன்படி இன்று காலையில் சைதாப்பேட்டை சின்னமலை அருகே பல்லாயிரக்கணக்கில் அ.தி.மு.க.வினர் திரண்டனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து



ஏராளமான தொண்டர்கள் தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பதாகைகளுடன் கலந்து கொண்டனர். எடப்பாடி பழனிசாமி வந்ததும் கவர்னர் மாளிகை நோக்கி கண்டன பேரணி புறப்பட்டது.

இதில் அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன், தலைமைக் கழக நிர்வாகிகளான முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, செங்கோட்டையன், டி.ஜெயக்குமார், நத்தம் விசுவநாதன், கே.பி.அன்பழகன், ஆர்.பி.உதயகுமார், செம்மலை, விஜயபாஸ்கர், டி.கே.எம்.சின்னையா, செல்லூர் ராஜூ, பா.வளர்மதி, கோகுல இந்திரா, வைகைச் செல்வன், ரமணா, மாதவரம் மூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் பாலகங்கா, விருகை வி.என்.ரவி, சிட்லபாக்கம் ராஜேந்திரன், வெங்கடேஷ் பாபு, சத்தியா, ராஜேஷ், வேளச்சேரி அசோக், ஆதிராஜாராம், கே.பி.கந்தன், ஜெயலலிதா பேரவை மாநில துணைச் செயலாளரான பரங்கிமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரும்பாக்கம் ராஜசேகர், அமைப்புச் செயலாளர் நெல்லை ஏ.கே.சீனிவாசன், கழக வர்த்தக அணி இணைச் செயலாளரான முன்னாள் சாத்தாங்குளம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஏ.எம்.ஆனந்தராஜா, எம்.ஜி.ஆர். இளைஞரணி இணைச் செயலாளர் டாக்டர் சுனில், எம்.ஜி.ஆர். இளைஞரணி மாநில துணைச் செயலாளர் துரைப்பாக்கம் டி.சி.கோவிந்தசாமி எம்.சி. ஆயிரம் விளக்கு 117வது வட்ட கழகச் செயலாளர் முன்னாள் கவுன்சிலர் சின்னையன் (எ) ஆறுமுகம், வடபழனி சத்திய நாராயண மூர்த்தி, மாணவரணி வக்கீல் ஆ.பழனி, முகப்பேர் இளஞ்செழியன், சைதை சொ.கடும்பாடி செக் போஸ்ட் எஸ்.வி.லிங்க குமார், திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் வி.அலெக்சாண்டர், முன்னாள் அமைச்சர் எஸ்.அப்துல் ரஹீம், பகுதி செயலாளர் ஜெ.ஜான், கே.பி.முகுந்தன், சி.வி.மணி, கொளத்தூர் முன்னாள் பகுதி செயலாளர் கொளத்தூர் கே.கணேசன் திருமங்கலம் மோகன், அபிராமி பாலாஜி, பாடி பா.கிருஷ்ணன், அனைத்து உலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர் புரசை வி.எஸ்.பாபு, துறைமுகம் பயாஸ் இளைய கிருஷ்ணன், புளியந்தோப்பு எம்.ஆர்.சந்திரன், பகுதி கழக செயலாளர் பட்மேடு டி.சாரதி, ஜி.ஆர்.பி.கோகுல், கே.சி.கார்டன் சந்திரசேகர், நேரு நகர் எஸ்.கோதண்டன் வழக்கறிஞர் இஸ்மாயில், கொளத்தூர் கணேசன், எஸ்.ஆர்.விஜய குமார், வடசென்னை தெற்கு (கிழக்கு) மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் எம்.பாலாஜி உள்பட ஏராளமான நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளுக்கான காசோலையினை வழங்கினார்.




இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.



இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.




இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் செய்தி மக்கள் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட தொகுப்பினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.




இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் செய்தி மக்கள் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட தொகுப்பினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

# துவண்டுபோன துகிலியல் துறை : வரலாறு காணாத தொழில் நெருக்கடி நிலையால் நிலைதடுமாறும் நூற்பாலைகள் உற்பத்தியை 50% குறைக்கப்போவதாக நூற்பாலைகள் சங்கத்தினர் அறிவிப்பு

## வங்கி கடன் செலுத்த கால அவகாசம், வட்டி விகிதம் குறைப்பு, மின் கட்டணத்தை குறைக்க வலியுறுத்திய நூற்பாலைகள் சங்க நிர்வாகிகள்

## லட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரத்தை காக்க உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை

சிறுகுறு நுற்பாலைகள் கூட்டமைப்பு இன்று பத்திரிகையாளர்களை சந்தித்தனர் அப்போது கூட்டமைப்பின் செயலாளர் ஜெகதீஷ் கூறியதாவது

நாட்டிலுள்ள தொழில் துறைகளில், குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்பை தருவது ஜவுளித்தொழில் துறை என்றால் அது மிகையல்ல. படித்த பட்டதாரிகளில் ஆரம்பித்து பாமரன் கூலி தொழிலாளி வரை அனைத்து வர்கத்தையும் அரவணைக்கும் தொழில் ஜவுளி தொழில். அப்படிப்பட்ட தொழிலை அரவணைக்க அரசாங்கங்கள் தவறிவிட்டதா என்ற கேள்வி எழுப்பும் வகையில் ஜவுளித்துறை கடும் தொழில் நெருக்கடிக்கு தள்ளப்பட்டிருக்கின்றன.

அதில் முதன்மையான இடம் வகிப்பது ஜவுளித்தொழினின் தாய் தொழிலான நூற்பாலைகள். நாட்டில் இயங்குகின்ற நூற்பாலைகளில் 50% நூற்பாலைகள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. பருத்தியிலிருந்து நூல் தயாரிக்கும் நூற்பாலைகள் கழிவு பஞ்சிலிருந்து நூல் தயாரிக்கும் ஓபன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள், ரீசைக்கில் மில்கள் என 2,000"க்கும் மேற்பட்ட மில்கள் இயங்கி வருகின்றன.

இந்த நூற்பாலைகள் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 15 லட்சம் குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன. இந்த நிலையில் ஜவுளித்தொழிலில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருப்பதனால்



லட்சக்கணக்கான குடும்பங்கள் மற்றும் ஜவுளி நூற்பாலைகளின் எதிர்காலம் என்னவாகும் என கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

உலக அசாதாரண பொருளாதார சூழ்நிலையால் வெளிநாடு இறக்குமதியால் நூற்பாலைகள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக உற்பத்தி செய்யப்படும் நூல்களை கிலோவுக்கு 20 முதல் 25 ரூபாய் வரை நட்டத்திற்கு விற்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றனர். வருடத்தில் 365 நாட்களும் மூன்று ஷிப்ட் என்ற அடிப்படையில் இயங்கி வந்த நூற்பாலைகள் தற்போது 50 சதவீதத்திற்கும் குறைவான வேலை வாய்ப்பினை தந்த வருகின்றன.

பங்களாதேஷ், வியட்நாம், சீனா போன்ற போட்டி நாடுகள் நூல்களை ஏற்றுமதி செய்திருந்த நிலையில், தற்போது உள்நாட்டிலேயே அவர்கள் உற்பத்தி செய்து அங்குள்ள ஆடை தயாரிப்பு நிறுவனங்களுக்கு வர்த்தகம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி இது போன்ற நாடுகளுக்கு கணிசமாக குறைந்திருக்கும் நிலையில், போட்டி நாடுகள் தற்போது இறக்குமதியிலும் கால் பதிக்க ஆரம்பித்து இருக்கின்றனர். இதனால் உள்நாட்டு நூல் உற்பத்தி போதுமான வர்த்தகம் இன்றி தவிக்கின்றது. இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நூல்களின் விலை இந்தியாவில் கிடைக்கின்ற சந்தை விலை குறைவாக இருப்பதனால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்கள் விற்பனை மந்தமாகியிருக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்களை நட்டத்தில் விற்கின்றனர்.

இந்த நிலையில் நூற்பாலைகள் சங்கத்தினர் சந்திக்கும் சவால்களை அடுக்கி அதற்கான தீர்வை எதிர்நோக்கியிருக்கின்றனர். கடந்த கொரோனா பேரிடரின் பொழுது நெருக்கடியில் இருந்த தொழில் முனைவோருக்கு ஒன்றிய அசராங்கத்தின் முன்னெடுப்பில் வங்கிகள் தந்த கடன்களை தற்பொழுது வட்டியுடன் செலுத்தி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதனால், கொரோனா பேரிடர் காலத்தில் பெற்ற கடனை திருப்பி செலுத்த 6 மாதத்திற்கு அவகாசம் கோருகின்றனர். நூற்பாலைகளுக்கான கடன் வட்டி சதவிகிதம் 7ல் இருந்து 11 ஆக உயர்ந்த நிலையில், மீண்டும் 7% ஆக குறைக்க நூற்பாலை தொழில் முனைவோர் ஒன்றிய அமைச்சகங்களுக்கு நூற்பாலை சங்கத்தினர் கோரி இருக்கின்றனர்.

இதேபோன்று தமிழ்நாடு அரசாங்கமும் உயர்த்திய மின் கட்டணத்தை உடனடியாக திரும்பப் பெறவும் வலியுறுத்தி இருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் நூற்பாலைகளின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி தொழிலை மீட்க வேண்டும் என நூற்பாலை சங்கத்தினர் கோருகின்றனர்.

இந்த நிலையில் நட்டத்தில் இயங்குகின்ற நூற்பாலைகள் 50 % உற்பத்தியை குறைக்க முடிவெடுத்து அறிவித்தனர். இதனால் நாள்தோறும் 150 முதல் 200 கோடி வர்த்தகம் பாதிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றன.

எனவே வர்த்தகம், தொழிலாளர் வாழ்வாதாரம், நூற்பாலைகள் தொழில் நட்டத்தினை கருதி உடனடியாக ஒன்றிய மாநில அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# செய்யூர் ஆய்வாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் !



மதுராந்தகம்: செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த சித்தாமூர் சுற்றியுள்ள பெருக்கரனை புத்தூர் பேரம்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்து 8 பேர் இறந்தனர் இந்த வழக்கு சம்பந்தமாக ஆறு பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர் இது சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மாற்றப்பட்டு இரண்டு உதவி ஆய்வாளர் ஒரு ஆய்வாளர் தற்காலிக பணி இடை நீக்கம் செய்தனர் இதன் தொடர்ச்சியாக இன்று செய்யூர் ஆய்வாளர் ஞானசேகரன் காத்திருப்போர் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்

இந்த மெத்தனால் கலந்த கள்ளச்சாராய வழக்கு சம்பந்தமாக ஆறு பேர் கைது செய்துள்ளனர் இதில் நான்கு குற்றவாளிகள் செய்யூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட குற்றவாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது

# திருப்போரூர் அருகே செம்பாக்கத்தில் தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்கம் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது

தாம்பரம்: தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்கம் கட்சியின் சார்பில் திருப்போரூர் ஒன்றியம் செம்பாக்கம் கிளையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தண்ணீர் பந்தல் திறப்பு விழாவிற்கு மாநில தலைமை செயலாளர் ஜான் ஜேக்கப் தலைமை தாங்கினார்.

மாநில ஒருங்கிணைப்பாளர் ஆபிரகாம், தெற்கு மாவட்ட தலைவர் பவுல், மாவட்ட துணைத் தலைவர் பாஸ்டின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தலைவர் ஆல்வின் ரிப்பன் வெட்டி தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, பழங்கள் மற்றும் தண்ணீர் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஞானபிரகாசம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார்,





மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் குமரேசன், மற்றும் மகளிர் அணி தலைவி சுகந்தி , துணைத் தலைவி மேகலா மற்றும் விளையாட்டு துறை அணி தலைவர் தாவீது உள்ளிட்ட மாவட்ட பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்

# மதுரப்பாக்கம் ஊராட்சி கோவிலாஞ்சேரியில் மக்கள் பசுமை இயக்கம் சார்பில் 100 மரங்கள் நடப்பட்டது





தாம்பரம்: தாம்பரம் அடுத்த மதுரப்பாக்கம் ஊராட்சி கோவிலாஞ்சேரி ஸ்ரீ டில்லி பாலாட்சியம்மன் கோவில் அருகே மக்கள் பசுமை இயக்கம் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.இந்நிகழ்ச்சி மாவட்ட தலைவர் ணி.கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக நிறுவனரும், மாநில தலைவருமான நாஞ்சில் சி.மனோகரன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டினார்.

அரசமரம், புங்கமரம், பூவரசு, தைல மரம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டது. மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில ஊடகப்பிரிவு செயலாளர் றி.சுபாஷ் செய்திருந்தார்

மக்கள் பசுமை இயக்கத்தின் தென் சென்னை பொருப்பாளர் சுரேஷ், மாநில நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரேகா ரங்கையன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், 19 வது வார்டுக்குட்பட்ட அண்ணா நகர் பேருந்து நிறுத்தத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் கோடை காலத்தில் வெய்யிலின் தாக்கத்தினால் ஏற்படும் உடல் உபாதைகளை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களுக்கு நீர்மோர், பழங்கள், ஓஸிஷி மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாண்புமிகு மேயர் கல்பனா அவர்கள் மற்றும் பொது சுகாதாரக் குழு தலைவர் பெ.மாரிசெல்வன் அவர்கள் வழங்கினார்கள். மண்டல தலைவர் வே.கதிர்வேல், உதவி ஆணையாளர், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இன்று (22.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்களிடம் திருமணம் செய்து கொண்ட மாற்றுத்திறனாளிகள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# கோவையில் வீட்டு மனை மற்றும் பண்ணை வீடுகளுக்கான மனைகளை குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதாக மெட்ரோ சிட்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் சுதா தெரிவித்துள்ளார்



கோவை: கோவை கொடிசியா வளாகத்தில் ப்ராபர்டி எக்ஸ்போ 2023 எனும் கட்டுமான தொழில் கண்காட்சி நடைபெற்று வருகின்றது.. , இந்த கண்காட்சியில் வீட்டு மனை விற்பனை நிறுவனங்கள் மற்றும் கட்டுமான தொழில் துறையினர் ஸ்டால்களை அமைத்திருக்கின்றனர். இதனை வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் அதிக அளவில் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில்இந்தகண்காட்சியில் கோவை காந்திபுரம் பகுதியில் இயங்கி வரும் மெட்ரோ சிட்டி டெவலப்பர்ஸ் தங்களது ஸ்டாலை அமைத்துள்ளனர்.கண்காட்சிக்கு வந்த பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதமாக மெட்ரோ சிட்டி டெவலப்பர்ஸ் புதிய சலுகைகளை அறிவித்தனர்.

இது குறித்து நிறுவனத்தின் இயக்குனர் சுதா கூறுகையில், வீட்டுமனைகள் விற்பனையில் எங்களது நிறுவனம் அதிக வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெற்ற நிறுவனமாக இருப்பதாகவும்,ஒசூர் மற்றும் திருச்சியிலும் கிளைகளை கொண்டு செயல்பட்டு வருவதாக கூறினார்.குறிப்பாக கோவையில் பொள்ளாச்சி சாலை,கிணத்துகடவு,ஒத்தக்கால் மண்டபம்,போன்ற பகுதிகளில் பண்ணை வீடுகள் அமைக்க விரும்புவர்களின் தேவை கருதி 25 செண்ட் என்ற அளவுகளில் குறைந்த விலையில் காலி இடங்கள் விற்பனைக்கு இருப்பதாக கூறினார். மேலும் மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட துடியலூர் அருகேயும் இதே போன்ற பண்ணை மனைகள் யாரும் கொடுக்காத விலையில் விற்பனைக்கு இருப்பதாக அவர் கூறினார்.மேலும் வீட்டுமனைகளுக்கென பல்வேறு சலுகைகளை தற்போது வழங்கி வருவதாக கூறிய அவர்,குறைந்த விலையில் வீட்டு மனைகள் வாங்க ஆர்வமுடையோர் மெட்ரோ சிட்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்தை உடனடியாக 8825631409 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023: சென்னை 13.06.2023 முதல் 17.06.2023 வரை நடைபெறுவது தொடர்பான செய்தியாளர் கூட்டம்!







மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023, சென்னையில் 13.06.2023 முதல் 17.06.2023 வரை நடைபெறுகிறது. இந்த போட்டி தொடர்பான செய்தியாளர்கள் கூட்டம் சென்னை கன்னிமாரா ஹோட்டலில் இன்று (22.05.2023) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் செய்தியாளர்களுடன் கலந்துரையாடல் நடத்திய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது ;

2023 SDAT-WSF ஸ்குவாஷ் உலகக் கோப்பையை ஜூன் 13 முதல் ஜூன் 17 வரை நடத்த விளையாட்டு நகரமான சென்னை தயாராகி வருகிறது. தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் நடைபெறும் இந்த போட்டி, உலகெங்கிலும் உள்ள சிறந்த ஸ்குவாஷ் வீரர்களை ஒன்றிணைப்பது மட்டுமல்லாமல் கோப்பையினை வெல்ல நமது வீரர்களுக்குவாய்ப்புகிடைத்துள்ளது என நான் நம்புகிறேன்.

முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான பிசிலி மற்றும் எக்ஸ்பிரஸ் அவென்யூ மால் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்பு வீரர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் உலகத் தரம் வாய்ந்த அனுபவத்தை அளிக்கும். ஸ்குவாஷ் உலகக் கோப்பைக்கான போட்டிகள் 2011 ஆம் ஆண்டில் இருந்த நிலையிலிருந்து இப்போது அதன் நான்காவது பதிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குட்பட்டுள்ளது. உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பின் (கீஷிதி) தலைவர், திரு. செனா உல்ரிச் ஸ்குவாஷ் விளையாட்டின் உள்கட்டமைப்பு மிக்க சிறந்த நகரமாக சென்னை இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் சென்னையில் நடைபெற உள்ள ஸ்குவாஷ் உலக கோப்பைக்கான போட்டி இளம் தலைமுறை ஸ்குவாஷ் ஆர்வலர்களை ஊக்குவிக்கவும், இந்தியாவில் ஸ்குவாஷ் விளையாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்றும் தெரிவித்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

2023 ஸ்குவாஷ் உலகக் கோப்பையில் போட்டியை நடத்தும் இந்தியாவுடன் ஹாங்காங், சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கொலம்பியா ஆகிய எட்டு நாடுகளை சேர்ந்த தலைசிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

அலுவலக தொடர்பு:
தின தொடர்
நெ.118, சிங்கன்ன செட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
email: dhinathodar2015@gmail.com / CELL : 9500149962

# கோவை குணியமுத்தூர் பகுதியில் உள்ள ஆதிசுவரி உடனுறை ஆதீசுவரர் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா திருநெறிய தமிழ்முறைப்படி கோலகலமாக நடைபெற்றது





கோவை: கொங்குநாட்டில் 1000 ஆண்டுகள் காலம் தொன்மையுடைய இராசகேசரி பெருவழியை ஒட்டி அமைந்துள்ள குணியமுத்தூர் ஜே.ஜே.நகர் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு காளிமுத்து அடிகளார் சிவலிங்கத்தை வழங்கினார்.அதே பகுதியில் உள்ள விநாயகர் கோவில் வளாகத்தில் கருவறை அர்த்த மண்டபத்துடன் அமைத்து ஆதீசுவரர் என அப்பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர்.

இந்நிலையில் அர்த்த மண்டபம் புணரமைக்கப்பட்டு,ஆதீசுவர்ருக்கு புதிய திருமேனி செய்யப்பட்டு ,விநாயகர்,தென்முகப்பரமன், அண்ணாமலையார்,பிரமா,கொற்றவை ஆகிய தெய்வங்கள் பதிட்டை செய்யப்பட்டு,அருள்மிகு ஆதிசுவரி உடனுறை ஆதீசுவரர் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா திருநெறிய தமிழ்முறைப்படி நடைபெற்றது. விழாவை முன்னிட்டு,கடந்த மூன்று தினங்களாக முதல் கால யாக பூஜை துவங்கி, விக்னேஸ்வர பூஜை, தன பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமமம், வாஸ்து சாந்தி மற்றும் மூன்று கால யாக பூஜைகள் உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக, பேரூர் பட்டிநாயகர் சைவநெறி அறக்கட்டளை தலைவர் முனைவர் இலட்சுமிபதிராசு தலைமையில் திருக்குட நன்னீராட்டு வேள்வி பணி நடைபெற்றது. மேள வாத்தியம் முழங்க கடம் புறப்பாடு நடைபெற்றது.

பின்னர் வேத விற்பன்னர்கள் மந்திரங்கள் ஓத புனிதநீர் கலசத்தில் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதையடுத்து ஆதீசுவரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்று, மகாதீபாரதனை காட்டப்பட்டது. விழாவில் கோவை உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த சிவனடியார்கள், சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்..விழாவிற்கான ஏற்பாடுகளை ஆதீசுவரர் திருக்கோயில் திருப்பணித் தலைவர் கிருஷ்ணன் , திருக்கயிலை சிவபூதகணத் திருக்கூட்ட அடியார்கள் சிவராசு, ஜெயகணேஷ், சுப்பிரமணி,முத்துராசு, பாலமுருகன், உதயகுமார், ஆனந்து, ஞானம் ஆகியோர் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம்





சென்னை: தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தின் முடிவின் படி , முதலமைச்சரின் காலை சிற்றுண்டி உணவு வழங்கும் திட்டத்தினை மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் தயாரித்து வழங்குவதை கைவிட்டு , சத்துணவு ஊழியர்கள் மூலமாக வழங்கிட கோரியும் , பள்ளி சத்துணவு மையங்களில் பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதால் , கடந்த 2017 முதல் சுமார் ஆறு வருட காலமாகியும் கூட , மாநிலம் முழுவதும் இது நாள் வரை நிரப்பப்படாமல் உள்ள பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் உடனடியாக நிரப்பிட கோரியும் , மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சந்திப்பு பெருந்திரள் முறையீடு சென்னை எழும்பூர் இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் 22.05.2023 நேற்று மாநில தலைவர் ஏ.சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி அவர்கள் துவக்கவுரை நிகழ்த்தினார்கள் மாநில துணை தலைவர் ப.மூர்த்தி அவர்கள் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார்கள்

# ஆசிரியர் கவிச்சுடர் திண்டுக்கல் பி.மீராபாய் எழுதிய நூல்கள் வெளியீட்டு விழா



திண்டுக்கல்: ஆசிரியர் கவிச்சுடர் திண்டுக்கல் பி.மீராபாய் எழுதிய ஆறிலோர் அறிவு, கனவுகளின் எழுச்சி நூல்கள் வெளியீட்டு விழா நிகழ்ச்சி திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகில் உள்ள மாவட்ட மைய நூலகத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் முதுகலை விரிவுரையாளர் வெ.சாந்தி வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம் மேனாள் தமிழ் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் குருவம்மாள் முதல் நூலை வெளியிட்டு தலைமை உரையாற்றினார்.

திண்டுக்கல் தமிழ் சங்கம் தமிழ் பெருந்தகை எஸ்.கே. தேவேந்திரன் முதல் நூலை பெற்றுக் கொண்டார். தமிழ் செம்மல் புலவர் துரை பில்லான் இரண்டாம் நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். கல்விப் புரவலர் ஜி. சுந்தர்ராஜன் இரண்டாம் நூலை பெற்றுக் கொண்டார். பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியின் மேனாள் தமிழ் துறை தலைவர் முனைவர் க.கிருஷ்ண மூர்த்தி மூன்றாம் நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். தமிழ் மாநில நாயுடு பேரவையின் மாநில தலைவர் லயன். என். கிருஷ்ணமூர்த்தி மூன்றாம் நிலை பெற்று கொண்டார். நிகழ்ச்சியில் இலக்கிய களம் ஆங்கில பேராசிரியர் ஆர். மனோகரன், திண்டுக்கல் இலக்கிய களம் ஏபிசி பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் மணிவண்ணன், தமிழ் ஆசிரியர் கழகம் பெ.கோவிந்தராஜன், இவள் தாரகை பத்திரிகை ஆசிரியர் பரிமளாதேவி, கலை இலக்கிய பெருமன்றம் பிரபாகரன், திண்டுக்கல் மாவட்ட மைய நூலகம் த.சுகுமார், முதுகலை ஆசிரியர் (ஓய்வு). தா. தியாகராஜன், எஸ்எஃப்ஆர்பிசி மாவட்ட பிரதிநிதி ஜி.வெங்கடேசன். பி.ஆர்.ஓ. , சீனிவாசன், மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு நூல்களை பெற்று சிறப்புரையாற்றினார்கள்

# கோக் ஸ்டுடியோ தமிழ் சமீபத்திய பாடலான ‘கண்மூடுதோ’ தூங்கும் நேரக் கதைகளின் உலகத்துக்கு உங்களை கொண்டு செல்கிறது

## சின்மயி ஸ்ரீபதா மற்றும் ஜான் பிரதீப் ஜேஎல் ஆகியோரின் இனிமையான தாலாட்டு பாட்டு, பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலான அழகான தொடர்பை பகிர்ந்து கொள்கிறது




சென்னை: முதல் பாடலான சகவாசி 2 மாதங்களுக்குள் 21 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளுடன் வெற்றி பெற்ற நிலையில், வேண்டும் மற்றும் தமிழி ஆகிய பாடல்களை தொடர்ந்து, கோக் ஸ்டுடியோ தமிழ் தனது நான்காவது பாடலான சீசன் 1ல் இருந்து ‘கண்மூடுதோ’ பாடலை வெளியிட்டது. இந்தப் பாடலில் பிரபலமான மற்றும் புகழ்பெற்ற பின்னணி பாடகி சின்மயி ஸ்ரீபதா மற்றும் கதாசிரியர் ஜான் பிரதீப் ஜேஎல் தாலாட்டு மற்றும் மெல்லிசையை தனித்துவமான வடிவத்தில் கொடுத்துள்ளனர்.

இவர்கள் இருவரும் இணைந்துள்ள மெல்லிசை பாடல் புவியியல் எல்லைகள், மொழிகள் மற்றும் பாலினங்களை விஞ்சும் மற்றும் அவர்களின் மிகவும் தூய்மையான மற்றும் மகிழ்ச்சியான நினைவுகளை நினைவூட்டும். சின்மயி, ஒரு புதிய தாயாக இருப்பதால், ஒரு பெற்றோருக்கும், நடக்க தொடங்கி இருக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவை தனது மெல்லிசை குரல் மூலம் தடையின்றி பிரதிபலிக்கிறார். ஜான் பிரதீப் ஜேஎல், தனது கதைசொல்லல் மூலம் குழந்தைகளுடனான சிறந்த பிணைப்பிற்கு பெயர் பெற்றவர், இந்த இசையமைப்பில் பாடல் வரிகள் சிரமமின்றி பூர்த்தி செய்து சரியாக பொருந்துகிறது.

கோக் ஸ்டுடியோ தமிழ் சீசன் ஒன், தமிழ்நாட்டின் கலாசார தத்துவத்துடன் இணைந்த உணர்வுகளை தூண்டும் கதைகளை சொல்ல ஒரே மேடையில் ஒன்று கூடும் வளர்ந்து வரும் கலைஞர்களை கொண்டாடுகிறது. ஹிப் ஹாப் ஸ்டால்வார்ட் அறிவு மற்றும் புகழ்பெற்ற இசை தயாரிப்பாளரான சீன் ரோல்டன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்த மேடை, மாநிலம் முழுவதிலும் இருந்து 25க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற மற்றும் திறமையான கலைஞர்களை ஒன்றிணைத்து எட்டு மறக்கமுடியாத பாடல்களை உருவாக்குகிறது. கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமான இசைக்கருவிகளின் அனுபவமிக்க ஒலிகளால் இந்த பாடல்கள் வலுப்பெறுகின்றன..

பழங்கால இசைக்கருவிகளின் மறுமலர்ச்சிக்கு பின்னால் உள்ள ஒரு சக்தியாக பிரபலமாக அறியப்படும் யாழ் தருண்சேகர் இந்த பாடலின் சிறப்பம்சமாகும். யாழ் என்பது பழங்கால தமிழ் இசையில் பயன்படுத்தப்பட்ட வீணை போன்ற ஒரு கருவியாகும். மேலும் இது 2,000 ஆண்டுகளுக்கு முந்தையது.

சின்மயி ஸ்ரீபதா கூறுகையில் “சில மாதங்களுக்கு முன்பு, என் குழந்தைக்காக நான் உருவாக்கிய டியூனை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டேன். இது ஒரு தாலாட்டு. என் வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் ஒரு தாலாட்டு பாடுவதை இயல்பாக உணர்ந்தேன். அப்போதுதான் கோக் ஸ்டுடியோ குழு தாலாட்டு காட்சியை உருவாக்க என்னை அணுகியது. இந்த காட்சிக்காக, ஜான் மற்றும் மற்ற குழுவினருடன் ஒத்துழைத்தது ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது.

# பிரதமர் மோடியை வித்தியாசமாக வரவேற்ற பப்புவா நியூ கினியா பிரதமர்!

பப்புவா நியூ கினியா நாட்டுக்கு முதல் முறையாக பயணம் மேற்கொண்டு இருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டு பாரம்பரிய வழக்கப்படி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின் பிரதமர் மோடியை பார்த்த அந்நாட்டு பிரதமர் ஜேம்ஸ் மராபே, சட்டென பிரதமர் மோடி காலில் விழ முயன்றார். அவரை தடுத்த பிரதமர் மோடி, மராபேவின் முதுகில் தட்டியப்படி அவரை எழுப்பினார். வரவேற்புக்கு பின் பிரதமர் நரேந்திர மோடி, பப்புவா நயூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராபேவை சந்தித்தார்.

சந்திப்பின் போது பப்புவா நியூ கினியாவில் பேசப்பட்டு வரும் டோக் பிசின் மொழிக்கு மாற்றப்பட்ட திருக்குறள் பதிப்பை நரேந்திர மோடி வெளியிட்டார். இதைத் தொடர்ந்து பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராபேவுடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் போது, இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இரு நாடுகள் இடையே வர்த்தகம், முதலீடு, ஆரோக்கியம், திறன் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் என்று பல்வேறு பிரிவுகளில் உறவை பலப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்கள் பேசினர்.

பேச்சுவார்த்தையின் போது பிரதமர் மோடி, பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராபேவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு அதனை தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் அக்கவுண்டில் பதிவிட்டார். 2014 ஆண்டு ஃபிஜிக்கு சென்றிருந்த பிரதமர் நரேந்திர மோடி இந்திய பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்திய பசிபிக் பகுதிகளில் சீனா தனது ராணுவ பலத்தை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சூழலில், இந்திய பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டம் பப்புவா நியூ கினியாவில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.





## கர்நாடக சட்ட சபை முன்பு கோமியம் தெளித்து சிறப்பு பூஜைகள் செய்த காங்கிரஸ் தொண்டர்கள் !

**பெங்களூரு:** கர்நாடக சட்டசபை தேர்தலில் 135 இடங்களை வென்று, காங்கிஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைத்துள்ளது. கடந்த 20ந் தேதி முதல்மந்திரியாக சித்தராமையாவும், துணை முதல்மந்திரியாக டி.கே. சிவக்குமாரும் பதவி ஏற்றுகொண்டனர். அதனை தொடர்ந்து காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின் முதல் சட்டசபை கூட்டம் இன்று விதான சவுதாவில் கூடியது. சட்டசபை கூடுவதற்கு முன்னதாக விதான சவுதா முன்பு காங்கிரஸ்



பிரமுகர்கள் சிலர் குவிந்தனர். அவர்கள் விதான சவுதாவின் முன்பகுதியில் சிறப்பு பூஜைகள் செய்தனர். அப்போது அவர்கள் கோமியத்தை தெளித்து, பூஜையில் ஈடுபட்டனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில், காங்கிரஸ் கட்சி புதிதாக ஆட்சி அமைத்துள்ளது. இன்று காங்கிரஸ் கட்சியின் முதல் சட்டசபை கூட்டம் நடந்தது. மேலும், பா.ஜனதாவின் ஊழல் ஆட்சியை முடிக்கப்பட்டுவிட்டதும். எனவே விதான சவுதாவை தூய்மைபடுத்துவதற்காக இங்கு கோமியம் தெளிக்கப்பட்டது என்றனர்.

## கவர்னர் ஆர்.என்.ரவியை சந்தித்து புகார் மனு அளித்தார் எடப்பாடி பழனிசாமி..!

**சென்னை:** சென்னை கிண்டி ராஜ்பவனில் கவர்னர் ஆர்.என்.ரவியை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்தித்து புகார் மனு அளித்துள்ளார். சட்டம்ஒழுங்கு, போலி மது, விஷ சாராய மரணம் குறித்து உரிய விசாரணை நடத்தக்கோரி கவர்னரிடம் மனு அளித்துள்ளார்.



இந்த சந்திப்பின் போது எடப்பாடி பழனிசாமியுடன் அதிமுக அவைத்தலைவர் தமிழ் மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, சி.வி.சண்முகம், ஜெயக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர். முன்னதாக எடப்பாடி பழனிசாமி தலைமையில் சைதாப்பேட்டை சின்னமலையில் இருந்து கவர்னர் மாளிகையை நோக்கி அதிமுகவினர் பேரணியாகச் சென்றனர். இதனால் சென்னையில் ஒருசில இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது இதனால் மக்கள் அவதிக்குள்ளாகினர். எடப்பாடி பழனிசாமியில் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பல்லாயிரக்கணக்கில் அ.தி.மு.க.வினர் பங்கேற்றனர்.

அலுவலக தொடர்பு:
தின தொடர்
நெ.118, சிங்கன்ன செட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
email: dhinathodar2015@gmail.com / CELL : 9500149962



இன்று (20.05.2023) கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி வளாகத்தில் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் நடைபெற்ற பள்ளி பேருந்து ஆய்வு முகாமில் விபத்துக்காலங்களில் ஓட்டுநர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்த செயல் விளக்கப் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் முன்னிலையில் செய்து காண்பிக்கப்பட்டது.



இன்று (19.05.2023) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஆலத்தூர் புனித அன்னாள் மன நல காப்பகத்தில் 11 ஆண்டுகள் மன நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் குணமடைந்தவரை அவரது குடும்பத்தினரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப, அவர்கள் ஒப்படைத்தார்.

## ஐ.பி.எல் டி20 ஒரு ரன் வித்தியாசத்தில் லக்னோ அணி த்ரில் வெற்றி

16வது ஐபிஎல் தொடரில் 68வது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மோதின. டாஸ் வென்ற கொல்கத்தா பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் லக்னோ அணி களமிறங்கியது. கொல்கத்தா அணியினரின் அபார பந்துவீச்சில் லக்னோ அணி சிக்கி விரைவில் விக்கெட்டுகளை இழந்தது. இதனால் 73 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. அடுத்து இறங்கிய ஆயுஷ் பதோனியுடன், நிகோலஸ் பூரன் ஜோடி சேர்ந்தார். 6வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 74 ரன்கள் சேர்த்த நிலையில் பதோனி 25 ரன்னில் ஆட்டமிழந்தார்.



ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் நிகோலஸ் பூரன் அதிரடியாக ஆடி அரை சதமடித்து 58 ரன்னில் வெளியேறினார். இறுதியில் லக்னோ அணி 8 விக்கெட் இழப்புக்கு 176 ரன்களை எடுத்துள்ளது. கொல்கத்தா சார்பில் ஷர்துல் தாக்குர், வைபவ் அரோரா, சுனில் நரைன் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 177 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

இதில், அதிகபட்சமாக அரை சதம் அடித்த ரிங்கு சிங் 67 ரன்கள் எடுத்து அவுட்டாகாமல் விளையாடினார். தொடர்ந்து, ஜாசன் ராய் 45 ரன்களும், வெங்கடேஷ் ஐயர் 24 ரன்களும், ரஹ்மனுல்லா குர்பாஸ் 10 ரன்களும், நிதிஷ் ராணா 8 ரன்களும், ஆண்டிரே ரூசல் 7 ரன்களும், ஷார்துல் தகூர் 3 ரன்களும், சுனில் நரைன் ஒரு ரன்னும் எடுத்தனர். இறுதியாக களமிறங்கிய வைபவ் அரோரா ஒரு ரன் மட்டுமே எடுத்தார்.

ஆட்டத்தின் முடிவில் கொல்கத்தா அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 175 ரன்கள் எடுத்து தோல்வியை சந்தித்தது. இதன்மூலம் ஒரு ரன் வித்தியாசத்தில் லக்னோ அணி த்ரில் வெற்றிப் பெற்றது.

## குஜராத் அணி வெற்றி.. 16 புள்ளிகளுடன் பிளேஆப் சுற்றுக்கு முன்னேறியது மும்பை

ஐபிஎல் தொடரில் பெங்களூருவில் நடைபெறும் 70வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. குஜராத் ஏற்கனவே பிளே ஆப் சுற்றுக்கு தகுதிபெற்றுவிட்டது. இந்த போட்டியில் பெங்களூரு அணி வென்றால் ப்ளே ஆப் சுற்றுக்கு முன்னேறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மும்பை, ஐதராபாத் அணிகளுக்கு இடையிலான போட்டியில் மும்பை வென்றால் நேரடியாக பிளே ஆப் சுற்றுக்கு தகுதிபெற்று விடும்.

தோற்கும் பட்சத்தில் பெங்களூரு அணிக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலை இருந்தது. இந்த சூழலில் மழையின் காரணமாக பெங்களூரு குஜாராத் அணிகளுக்கு இடையிலான போட்டிக்கான டாஸ் தாமதமாக போடப்பட்டது. இதில் டாஸ் வென்ற குஜராத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து பெங்களூரு அணி முதலில் பேட்டிங் செய்ய தொடங்கியது. இதில், விராட் கோலி 61 பந்துகளில் சதம் அடித்து 101 ரன்களை குவித்து ஆட்டமிழக்காமல் விளையாடினார்.



தொடர்ந்து, பிளெஸிஸ் 28 ரன்களும், மைக்கேல் பிரேஸ்வெல் 26 ரன்களும், மேக்ஸ்வெல் 11 ரன்களும் லாம்ரார் ஒரு ரன்னும் எடுத்தனர். தினேஷ் கார்த்திக் ரன்கள் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அனுஜ் ரவாட் 23 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். நூர் அகமது 2 விக்கெட்டும், ஷமி, யாஷ் தயால், ரஷித் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தின் முடிவில் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 197 ரன்களை பெங்களூரு அணி எடுத்தது. இதைதொடர்ந்து, குஜராத் அணி 198 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. இதில், அதிபட்சமாக 52 பந்துகளில் சுப்மன் கில் சதம் அடித்து 104 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். தொடர்ந்து, விஜய் சங்கர் அரை சதம் அடித்து 53 ரன்களும், விரிதிமான் சாகா 12 ரன்களும், டேவிட் மில்லர் 6 ரன்களும் எடுத்தனர். ராகுல் திவாதியா 4 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் விளையாடினார்.

இந்த ஆட்டத்தின் முடிவில், 19.1 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 198 ரன்ககளை எடுத்து குஜராத் அணி அபாரமாக வெற்றிப்பெற்றது. இதனால், பெங்களூரு அணி பிளே ஆப் சுற்றுக்குள் நுழைய முடியாமல் வெறியேறியது. குஜராத் அணியின் வெற்றியின் மூலம் 16 புள்ளிகளுடன் மும்பை அணி பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

Owned and Published by A. ANDREWS DAVID, from No.10/3, Old Bunglow Street, Chintadripet, Chennai - 600 002 and Printed by him at CHENNAI OFFSET PRINTERS, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai - 600002.
Editor : A. ANDREWS DAVID, Call: 96000 00467.